**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.4/2016**

**வா.சா. – 1 – சுரேஷ்**

**நாள். 01.08.2023**

**2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தின் 3 வது பக்கம் 4 வது பாராவில் " இந்நிலையில் எங்களுக்கு தெரியாமல் பிராது சொத்தில் எங்கள் பாகத்தையும் மற்றும் 1ம் பிரதிவாதியின் பிரிவினையில்லாத பங்கு பாகத்தையும் மோசம் செய்யும் எண்ணத்தில் 2,3 பிரதிவாதிகள் தமக்கு வேண்டியவர்களை வைத்து ஆறுமுககவுண்டர் உயிருடன் இருந்த பொழுது 3ம் பிரதிவாதி பெயரில் உயில் பத்திரம் எழுதி வைத்தது போல் ஆறுமுகக்கவுண்டரின் கையெழுத்தை போர்ஜரி செய்து ஒரு மோசடி உயிலை உற்பத்தி செய்துள்ளனர் " என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு 2,3 பிரதிவாதிகள் மோசடியாக உயிலை உற்பத்தி செய்துள்ளனர் என்ற விபரம் எனக்கு 2016ல் என் தந்தை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் தெரியும். என் தகப்பனாருக்கு இந்த விபரம் எப்படி தெரியும் என்று எனக்கு தெரியாது. என் பாட்டனார் ஆறுமுககவுண்டர் உயிருடன் இருக்கும் போது, குடும்பத்தார் அனைவருக்கும் தான் 3ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொறுத்து உயில் எழுதி வைக்க போகும் விபரத்தை சொன்னதன் அடிப்படையில் என் தந்தையாருக்கு தெரிய வந்தது என்றால் சரியல்ல. 2,3 பிரதிவாதிகளின் மோசடி உயில் எங்களை கட்டுப்படுத்தாது என்றும், நாங்கள் அதனை நிராகரிக்கிறோம் என்றும் என் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். என்னுடைய வழக்குரையிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லப்பட்டுள்ள உயில், தற்போது என்னிடம் காட்டப்படும் உயில் ஆவணம் தானா என்றால், இந்த உயில் தான், ஆனால் அது போர்ஜரி. இந்த உயிலின் அடிப்படையில் தான் 3ம் பிரதிவாதி தாவா சொத்தில் உரிமை கோருகிறார் என்றால் ஆமாம். அந்த உயிலை ஆறுமுகக்கவுண்டர் தனது சுயநினைவுடனும்,தெளிவான சிந்தனையுடனும் 3ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. 2,3 பிரதிவாதிகள் இந்த உயிலின் அடிப்படையில் தாவா சொத்தில் உரிமை கோருகிறார்கள் என்ற விபரம் எதிர் வழக்குரையின் மூலம் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் உயில் ஆவணத்தில் ஒட்டப்பட்டுள்ள புகைப்படம் ஆறுமுகக்கவுண்டரின் புகைப்படம் தான். இந்த உயிலில் உள்ள கையொப்பங்கள் அனைத்தும் ஆறுமுகக்கவுண்டரின் கையொப்பங்கள் தான் என்றால் சரியல்ல. இந்த உயில் பற்றிய விபரத்தை எதிர் வழக்குரையில் சொல்லியுள்ள நிலையில், இந்த உயிலின் நகலை எடுத்து நான் பார்த்தேனா என்றால், என் தந்தை பார்த்துள்ளார். அதன் பின்னர் தான் வழக்கு போட்டார். என் தகப்பனார் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர்,

எடுத்து பார்த்த உயிலின் நகல் என்னிடம் உள்ளது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. உயிலின் நகல் எடுத்ததாக என் தகப்பனார் சொன்னார். என்னுடைய பிராதின் 8 வது பாராவில் உயிலை காட்டி பட்டாவை மாற்றி கொண்டார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த உயிலில் 2ம் பிரதிவாதி கலையரசி சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி உயில் திண்டுக்கல், 2ம் எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் நகல் எடுத்து பார்த்ததாக என் தகப்பனார் என்னிடம் சொன்னார். மேற்படி உயில் எனது பாட்டனார் ஆறுமுகக்கவுண்டரின் கையொப்பத்தை போர்ஜரி செய்து, உற்பத்தி செய்துள்ளார்கள் என்று எதனை வைத்து சொல்கிறேன் என்றால் ஆறுமுகக்கவுண்டர் அது போன்று கையொப்பம் போடமாட்டார். ஆறுமுகக்கவுண்டர் கையொப்பம் போட்டதை நான் பார்த்துள்ளேன் என்றால், ஒரு சில சமயம் பார்த்துள்ளேன். புதுக்கோட்டை கிராமத்தில் சர்வே எண்.41 நம்பருக்கு கட்டுப்பட்ட சொத்தின் ஒரு பகுதியை 2ம் பிரதிவாதியின் தாயார் மீனாட்சியம்மாள் என் தகப்பனாருக்கு உரிமை ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்று சொல்லியுள்ளேன். அவ்வாறு மீனாட்சியம்மாள் என் தகப்பனாருக்கு தானமாக 5 ஏக்கர் கொடுத்துள்ளார். அந்த தான பத்திரம் என்னிடம் இல்லை. மேற்படி சர்வே எண்.41 ஆனது 5 ஏக்கர் 86 செண்ட்டுக்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான். 5 ஏக்கர் 86 செண்டில், என் தகப்பனாருக்கு 5 ஏக்கர் எழுதி வைத்தார். மீதி 86 செண்ட் மீனாட்சியம்மாள் 2ம் பிரதிவாதி கலையரசிக்கு எழுதி வைத்தார் என்றால் சரிதான். ஆனால் அதன்பின்பு என் பெயருக்கு உயில் எழுதி கொடுத்துள்ளார். என்னிடம் காட்டப்படும் உயில் சாசனம், 2ம் பிரதிவாதி கலையரசிக்கு மீனாட்சியம்மாள் எழுதி கொடுத்த உயில் சாசனம் தான். அது பி.வா.சா.ஆ.2 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தின் நகல் வாங்கி பார்த்துள்ளேன். மேற்படி உயில் சாசனம் பி.வா.சா.ஆ.2–ல் எழுதும் இடத்திலும், பதியும் இடத்திலும் என் பாட்டனார் ஆறுமுகக்கவுண்டர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால், ஆமாம். 3ம் பிரதிவாதிக்கு ஆறுமுகக்கவுண்டர் 08.02.2010ம் தேதி எழுதிக்கொடுத்த உயிலுக்கு 2 மாதங்கள் கழித்து தான் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் ஆறுமுகக்கவுண்டர் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். ஆனால் 08.02.2010ம் தேதிய உயில் ஆறுமுகக்கவுண்டர் எழுதிக்கொடுத்துள்ளார். 3ம் பிரதிவாதிக்கு 08.02.2010ம் தேதி வழக்கு சொத்தை பொறுத்து ஆறுமுகக்கவுண்டர் எழுதி வைத்த உயில் பற்றிய விபரம் எனக்கு ஆரம்பித்திலிருந்தே தெரியும் என்றும், தற்போது வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆறுமுகக்கவுண்டர் உயில் எழுதி வைத்த பிறகு, 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் சவரட்சனையிலும், பராமரிப்பிலும் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. ஆறுமுகக்கவுண்டர் 22.11.2011ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதற்கு முன்பே ஆறுமுகக்கவுண்டரின் இரண்டு மனைவிகள் நல்லம்மாள், மீனாட்சியம்மாள்

இறந்துவிட்டனர் என்றால் சரிதான். ஆறுமுகக்கவுண்டர் இறக்கும் வரையிலும், நல்ல உடல் நலத்துடனும் , நல்ல மனநிலையிலும் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. ஆறுமுகக்கவுண்டர் உடல் நிலை சரியில்லாமல் இருந்தார். வயோதிகத்தின் காரணமாக அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தது. என்னுடைய பதில் வழக்குரையில் 4 வது பாராவில் 3 வது பக்கத்தில் "இந்நிலையில் உடல்நிலை அசௌகரியம் மற்றும் வயோதிகம் காரணமாக தனது 90 வது வயதில் காலமாகிவிட்டார்" என்று சொல்லியுள்ளேன். ஆறுமுகக்கவுண்டர் இறந்த பிறகு, அவரது உடலை அவர் இருந்த தோட்ட வீட்டிற்கு கொண்டு வந்த போது, நானும், என் குடும்பத்தாரும் அதை தடுத்து கலவரம் செய்தோம் என்றால் சரியல்ல. அவர் இறந்ததே அந்த தோட்டத்து வீட்டில் தான். அந்த பிரச்சினைக்கு பஞ்சாயத்து தலைவர் குப்புச்சாமி சமாதானம் செய்து அந்த இடத்தில் அவரது உடலை வைக்க ஏற்பாடுகள் செய்தார் என்றால் சரியல்ல. ஆறுமுகக்கவுண்டர் இறப்பின் போது, அவருக்கு செய்ய வேண்டிய இறுதி சடங்குகள் அனைத்தையும் 2 ம் பிரதிவாதிதான் சுமார் ரூ.50 ஆயிரம் செலவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. நானோ என் பெற்றோரோ ஆறுமுகக்கவுண்டரின் உடல்நலத்தை பற்றி கவனிக்கவில்லை என்றும், பணிவிடை செய்யவில்லை என்றும் சொல்வது சரியல்ல. 22.11.2011 ம் தேதி ஆறுமுகக்கவுண்டர் இறந்த பின், அவர் எழுதி வைத்த 08.02.2010 ம் தேதியிட்ட உயில் சாசனம் நடைமுறைக்கும், ஊர்ஜிதத்திற்கும் வந்து அதன்படி, வழக்கு சொத்து 3 ம் பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டு, அவரது அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை, 3 ம் பிரதிவாதி, அவரது தாயாரான 2 ம் பிரதிவாதியின் உதவியுடன் பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நானும், என் தந்தையாரும் எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு 3 ம் பிரதிவாதி பானுப்பிரியா பெயரில் பட்டா மாறியுள்ளது என்றால் சரிதான். இந்த விபரத்தை என் வழக்குரையில் கூறியுள்ளேன். வழக்கு சொத்திற்கு 3 ம் பிரதிவாதி பெயரில் பட்டா மாறியுள்ளதை ஆட்சேபணை செய்து, இதுநாள்வரை நானோ, என் தகப்பனாரோ நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றால், என் தகப்பனார் எடுத்தாரா இல்லையா என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்குரிய கிஸ்தியை 2,3 பிரதிவாதிகள் தான் செலுத்தி வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. என் பெயருக்கோ, என் தந்தையார் பெயருக்கோ வழக்கு சொத்தை பொறுத்து பட்டா இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு நானோ, என் தகப்பனாரோ இது நாள்வரை கிஸ்தி கட்டவில்லை என்றால் சரிதான். எங்கள் பெயரில் இல்லாததால் நாங்கள் கிஸ்தி கட்டவில்லை. ஆறுமுகக்கவுண்டர் இறந்ததிலிருந்து தற்போது வரை வழக்கு சொத்துக்கள் எங்கள் பொறுப்பில் இருந்தது என்பதை காண்பிக்க வருவாய் துறை ஆவணங்கள் எதையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக குத்தகைக்கு விட்டுள்ளோம். கருப்பணன் மகன் கண்ணப்பன் என்பவருக்கு குத்தகைக்கு

விட்டுள்ளோம். இந்த குத்தகை விபரத்தை எங்கள் வழக்குரையிலோ, என் நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சொல்ல தவறிவிட்டோம். குத்தகைக்கு எழுத்து பூர்வ ஆதாரம் இல்லை. முன்பணம் ஏதும் இல்லை. வருடம் முடிந்தவுடன் ரூ.20 ஆயிரம் கொடுக்க வேண்டும். அவர் ரூ.20 ஆயிரம் வருடம் முடிந்து கொடுத்தார் என்பதற்கு ஆதாரம் ஏதும் இல்லை. ஆறுமுகக்கவுடண்டர் இறந்த பிறகு 2011 லிருந்து குத்தகைக்கு விட்டோம். கருப்பணன் மகன் கண்ணப்பனுக்கு நானோ, என் தகப்பனாரோ வழக்கு சொத்தை எந்த காலத்திலும் குத்தகைக்கு விட்டதில்லை என்றும், ரூ.20 ஆயிரம் குத்தகை தொகை ஏதும் நாங்கள் வாங்கியதில்லை என்றும் சொல்வது சரியல்ல. மேற்படி குத்தகை என்ற கட்டுக்கதையை வழக்கிற்கு பின்னால், பின் யோசனை செய்து, சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் Memo நாங்கள் தாக்கல் செய்ததுதான். அதில் 3,4 வாதிகள் இந்த வழக்கை நடத்த முன்வராததால், அவர்களை நீக்கறவு செய்ய வேண்டும் என்று வேண்டி அந்த memo தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 3,4 வாதிகள் இருவரும் கைரேகை வைக்கும் நபர்கள் என்றால் சரிதான். 3,4 வாதிகளான பெரியம்மாளோ, முத்தம்மாளோ என் அப்பாவுடன் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்வதற்கு எந்த காலத்திலும் வரவில்லை என்றால் சரியல்ல. 3,4 வாதிகளின் பெயர்களை இந்த வழக்கில் சேர்த்து, அவர்களது ரேகையை நாங்களே உற்பத்தி செய்து, இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 3,4 வாதிகளை இந்த நீதிமன்றத்திற்கு வரவழைத்து அவர்களும் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்தார்கள் என்பதை நிருபிக்க முடியுமா என்றால் முடியும். வழக்கு சொத்தின் அளவு 16 ஏக்கர் 81 செண்ட். வழக்கு சொத்துக்களில் 4/6 பாகம் கேட்டுள்ளோம். அதாவது என் தகப்பனாருக்கு ஒரு பாகம், என் அத்தை 2 ம் வாதிக்கு ஒரு பாகம், மற்றும் 3,4 வாதிகளுக்கு தலா ஒரு பாகம் ஆக நான்கு பாகங்கள் கேட்டு வழக்கு போட்டுள்ளோம். நான் தாக்கல் செய்துள்ள Memo வின் படி 3,4 வாதிகளுக்கு நாங்கள் கேட்டுள்ள பாகம் அற்றுப்போய்விட்டது என்றால் சரிதான். 2 ம் வாதி பழனியம்மாள் இறந்துவிட்டார். அவரது வாரிசுகளாக 6 முதல் 9 வாதிகள் சேர்க்கப்பட்டுள்ளனர். 6 முதல் 9 வாதிகள் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க தயாராக இல்லை என்றால் சரியல்ல. சாட்சியம் அளிப்பார்கள். ஆறுமுகக்கவுண்டர் அவருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்தை, 3 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த 08.02.2010 ம் தேதிய பதிவான உயிலின் படி 3 ம் பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றும், அதில் என் அப்பாவுக்கோ, எனக்கோ, மற்ற வாதிகளுக்கோ எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. 2,3 பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிக்கும் கெட்ட எண்ணத்தில் பொய்யான விபரங்களுடன் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 08.02.2010 ம் தேதிய உயிலின் படி, வழக்கு சொத்து 3 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், அவரது அனுபவத்தை நாங்கள் இடையூறு செய்யக்கூடாது என்றும்,

எதிர்பாத்திய கோரிக்கை கேட்டுள்ளனர் என்றால் சரிதான். எங்களுக்கு எந்த பாகமும் கிடைக்கக்கூடியது அல்ல என்று வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், 2,3 பிரதிவாதிகளின் எதிர் கோரிக்கையை அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் சொல்வது சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

Additional District Judge,

Dindigul.